**கல்வியியல் துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**ஆய்வுக் கட்டுரை பக்க வடிவமைப்பு தொடர்பான சில அடிப்படை விடயங்கள்**

1. **வெளி மட்டை** – (Dust Cover/Jacket Type) **வெள்ளை நிற** தடித்த மட்டை
   கீழ்வரும் விபரங்கள் **தமிழில் பாமினி எழுத்தில்** குறிப்பிடல் வேண்டும்.
   i. மேலே ஆய்வுத் தலைப்பு Center Alignment, Font Sixe 16
   ii. நடுவில் ஆய்வாளர் முழுப்பெயர் அதன் கீழ் பதிவிலக்கம் Center Alignment, Font Size 14
   **(இங்கு மேற்பார்வையாளர்/கள் பெயர் குறிப்பிடப்படல் ஆகாது)**
   iii. கீழே கல்வியியல் துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, 2021 என ஒன்றன் கீழ் ஒன்றாக குறிப்பிடல் வேண்டும். Center Alignment, Font Size 14

2. **ஆய்வுக் கட்டுரையின் மட்டை – (Hard Cover Black)** – இங்கு வெளிமட்டையில் குறிப்பிட்ட விடயங்களை அப்படியே பிரதிசெய்து **தங்க நிற** எழுத்துக்களில் பொறித்தல் வேண்டும். ஆய்வுக் கட்டுரை அச்சாக்கம் செய்யும் அனுபவம் உள்ள அச்சகதாரர் இதனை அறிவார்.

**3. தலைப்புப் பக்கம் – தமிழில்**

   i. மேலே ஆய்வுத் தலைப்பு Font Size 16 Center Alignment
   ii. ஆய்வாளர் முழுப் பெயர் அதன் கீழ் பதிவிலக்கம் Font Size 14 Center Alignment
   iii. பிரகடனம் - இவ் ஆய்வுக்கட்டுரை பட்டப்பின் கல்வி டிப்ளோமா இறுதிப் பரீட்சை 2021**(ஆண்டு மாற்றத்துக்குரியது)** இன் தேவையினை பூர்த்தி செய்கின்ற ஓர் அலகாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறைக்கு சமர்ப்பக்கப்படுகிறது. Font Size 14, Justification Alignment
   iv. மேற்பார்வையாளர்/கள் பெயர் – **பதவிநிலை தேவையற்றது** Font Size 14, Center Alignment
   v. கீழே கல்வியியல் துறை,கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, 2021 **(ஆண்டு மாற்றத்துக்குரியது)** என ஒன்றன் கீழ் ஒன்றாக குறிப்பிடல் வேண்டும். Font Size 14

**4. தலைப்புப் பக்கம் – ஆங்கிலத்தில்**

மேலே பிரிவு 3 இல் தமிழில் குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தும் அதே பக்க வடிவமைப்பில் ஆங்கிலத்தில் குறிப்பிடல் வேண்டும்.

பிரகடனம் பின்வருமாறு அமையும்

This Dissertation is submitted to the Department of Education, Faculty of Arts, University of Jaffna in partial fulfilment of the requirements for the Degree of Postgraduate Diploma in Education 2019/2020 (**Academic Year is Changeable according yours**)

5. **முகப்புப் பக்கங்கள் – உரோமன் இலக்க பக்கங்கள்**

   i. ஆய்வாளர் உறுதியுரை – குறித்த நியமத்தைப் பின்பற்றவும்
   ii. ஆய்வுக் கட்டுரை அனுமதிப் படிவம் – குறித்த நியமத்தை பின்பற்றவும்.
   iii. நன்றியுரை
   iv. ஆய்வுச் சுருக்கம் – ஒரு பக்கத்தில் அமைந்த ஒரு முழுப்பந்தி, Line Space 1.0, Justification Alignment, இறுதியில் திறவுச் சொற்கள் ஐந்துக்கு மேற்படலாகாது
   v. பொருளடக்கம் – உரோமன் இலக்க பக்கங்கள் உட்பட அத்தியாயத்தின் உப பிரிவுகள் உட்பட அனைத்தையும் பக்க ஒழுங்கில் குறிப்பிடவேண்டும்.
   vi. அட்டவணைகளின் விபரம் – அட்டவணை எண், தலைப்பு, பக்க இல
   vii. வரைபுகளின் விபரம் – வரைபு எண் , தலைப்பு, பக்க இல
   viii. சுருக்க குறியீட்டு விளக்கம்

6. **அத்தியாய வகுப்பாக்கம்**

அத்தியாயம் ஒன்று – அறிமுகம்
அத்தியாயம் இரண்டு – இலக்கிய மீளாய்வு
அத்தியாயம் மூன்று – ஆய்வு முறையியல்
அத்தியாயம் நான்கு – தரவு முன்வைப்பும் தரவுப் பகுப்பாய்வும்
அத்தியாயம் ஐந்து – முடிவுகளும் பரிந்துரையும்

7. **அத்தியாயங்களின் பக்க வடிவமைப்பு**

அத்தியாயங்களின் Margins: Left 1.5 Inch, Others 1 Inch, Line Space 1.5
அத்தியாய தலைப்பு பாமினி எழுத்துரு 16 அளவு Center Alignment
உப தலைப்புக்கள் - பாமினி எழுத்துரு 14அளவு Justification Alignment
உடல் பாமினி எழுத்துரு 12 அளவு Justification Alignment, பந்தியின் தொடக்கத்தை **ஒரு Tab** செய்யவும்.
பக்க இலக்கமிடல் கீழே மத்திய நிலையில் தனித்த இலக்கங்கள்
**முக்கிய குறிப்பு** : அத்தியாயங்களுக்கு முன் அத்தியாயம் ஒன்று அறிமுகம் எனப் பெரிய எழுத்தில் பக்க எல்லைகளுடன் வடிவமைப்பு செய்து பாடசாலை மாணவர்களின் ஒப்படை போன்ற முகப்புப் பக்கங்கள் வைப்பதைக் கட்டாயமாகத் தவிர்க்கவும்.

8. **உசாத்துணை**

Harvard Referencing Style ஐ பின்பற்றவும்.
Author Surname, Initials. (Publication Year). *Title of the Text in Italics.* Place of Publication: Publisher.
குறிப்பு : புத்தகங்கள், ஆய்விதழ்கள், இணையத்தளங்கள், சமூகவலைத்தளங்கள் என்பவற்றை குறிப்பிட சிறு சிறு வேறுபாடுகளுடன் தனித்துவ விசேடமான முறைமை இருப்பதால் மேற்பார்வையாளர் ஆலோசனையைப் பெறவும்

9. **அட்டவணைகளைப் பெயரிடல் மற்றும் இலக்கமிடல் –**

அட்டவணைகள் அத்தியாயங்களின் பக்கங்களின் மத்திய பகுதியில் இருத்தல் வேண்டும். அட்டவணையின் பெயர் அட்டவணையின் மேலே குறிப்பிடப்படவேண்டும். அட்டவணைக்கு இலக்கமிடல் இரண்டு வகையாக செய்யலாம்.

1. ஆய்வுக் கட்டுரையின் முழுமையிலுமுள்ள அட்டவணைகளை 1,2,3 ...... என இலக்கமிடலாம்.
2. அத்தியாயங்களின் அடிப்படையில் 1.1, 4.1, 4.2, எனவாக இலக்கமிடலாம். – இவ் வகை விரும்பத்தக்கது.

அட்டவணைகளின் மூலங்களை அட்டவணையின் கீழே குறிப்பிடவும்.

10. **வரைபுகளைப் பெயரிடல்**

வரைபுகளின் கீழ் அட்டவணைகளை பெயரிடும் இரு வகை ஒழுங்கில் பெயரிடலாம்.

11. **பின்னிணைப்புக்கள்**

ஆய்வில் பயன்படுத்தப்பட்ட வினாக்கொத்து உட்பட்ட ஆய்வுடன் தொடர்புடைய மூல ஆவணங்களை பின்இணைப்பாக இணைக்கவேண்டும்.

12. **சுருக்க குறியீடுகளுக்கான விளக்கம் - அதிகமாக இருப்பின் மட்டும்**

ஆய்வுக் கட்டுரையில் அங்காங்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் சுருக்க குறியீடுகளுக்கான விளக்கங்கள் முகப்பு பக்கங்களில் நிறைவாக குறிப்பிடலாம்.

உதாரணம் SBM- School Based Management

க.பொ.த (சா/த) – கல்விப் பொதுத் தராதர சாதாரணதரம்

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அடிப்படையான பக்கவடிவமைப்புக் குறித்த விடயங்கள். ஆய்வுக் கட்டுரை அச்சிட முன்னர் மேற்பார்வையாளருடன் தொடர்பு கொண்டு அனைத்தும் செவ்வனேயுள்ளமையை உறுதிப்படுத்தவும்.

கல்வித் துறையினால் வழமையாக பின்பற்றப்படும் நடைமுறைகளின் அடிப்படையில் தொகுத்தவர். **இ.சர்வேஸ்வரா – விரிவுரையாளர் கல்வியியல் துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**